## கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் - 2017

கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக்கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01**

(i) நியமத்தின் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களுடன் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், பங்களிப்புப் பணம், சுற்று நிதியம், மக்கள் வங்கி நிதிஉதவி மற்றும் பொது வைப்புக் கணக்குகள் போன்றவை தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை மற்றும் விரிவான அட்டவணை என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 59 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 6,132,446 தொகையான ஐயக்கடன், வருமான செலவின கூற்றில் அந்தத் தலைப்பில் காண்பிக்கப்படாமல் ஏனைய செலவினத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(iii) நியமத்தின் 70 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்கள் திரவத்தன்மை ஒழுங்கு முறையில் அமைக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நியமத்தின் 132 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதி, பெறுமானத்தேய்வு விகிதம், முதலீடு மற்றும் முதலீட்டு வட்டி போன்றவை தொடர்பாக அளவீடு செய்யும் அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**

(i) மீளாய்வாண்டில் காசுப்பாய்ச்சலில் தாக்கத்தை ஏற்படுத்தாத திரட்டிய மிகையில் ரூபா 298,261 இனால் காணப்பட்ட வேறுபாடு காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 40 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 11,205,187 தொகையான முதலீட்டு வட்டி கிடைப்பனவு முதலீட்டு காசு மூலமாக தனியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது காசாக நிரந்தர வைப்பில் முதலீடு செய்யப்பட்ட தொகை ரூபா 64,500,000 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் நிலையான வைப்பு கைப்பற்றல் காசு வெளிப்பாய்ச்சலாக ரூபா 96,083,650 காண்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 4,755,627 கிரயமான நடைமுறையல்லாச் சொத்துக்கள் 08 வருடங்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நிதியத்திற்கு கிடைத்த ரூபா 16,200,000 தொகையான அரச வங்கி நிதியுதவி அந்த வருடத்தின் வருமானமான இனங்காணப்படாது செலுத்த வேண்டிய மீதியாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அந்த நிதியுதவி வருமானமாக இனங்காணும் முறை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச நிதி உதவிகளிலிருந்து மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,272,725 தொகையான கணனி, உபபாக உபகரணங்கள், கணனி சொத்துக் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் அந்த அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) அரசாங்க வங்கி நிதிஉதவிகளிலிருந்து ரூபா 306,657 தொகையான பயிற்சிச் செலவினமொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும், அது வருமான செலவினக் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டின் இலாபம் அந்த அளவால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பங்களிப்புப் பண பட்டோலையின் கூட்டுமொத்தம் நிதிக்கூற்றுக்களின் பெறுமதியை விட ரூபா 915,797 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | விவசாய நிதிய மிகை | 14,503,854 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| (ஆ) | கூட்டுறவுச் சங்கக் கடன் | 47,164,884 | |
| (இ) | தீர்க்கப்படாத முற்பணம் | 45,525 | |
| (ஈ) | ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 20,000 | |
| (உ) | கடன் வழங்குதல் ஊவா மாகாணம் | 5,439,905 | |

## 2.3 பெறவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையின் நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த 1997 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 2,666,000 தொகையான கூட்டுறவுப் பாடசாலைக் கடன், 2012 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து கொண்டு வரப்படுகின்ற ரூபா 1,999,600 தொகையான செயலாற்றல் முற்பணம் மற்றும் ரூபா 1,184,000 தொகையான நீதிமன்ற இழப்பீடு என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| நிதிப்பிரமாணம் 188(2) | 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 300,000 கூட்டுத்தொகையான வைப்புச் செய்யப்பட்ட போதிலும், தீர்வையாக 02 காசோலைகள் தொடர்பாக 2018 யூலை 15 ஆந் திகதி வரையிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய 423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | |
| (i) 4.2 ஆம் பந்தி | நிதியததின் வங்கிக் கணக்கும் புத்தகங்களும் தினந்தோறும் இணக்கம் செய்யப்பட்டு செயன்முன்னேற்றம் தொடர்பாக ஒவ்வொரு காலாண்டிற்குமான அறிக்கை அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 4.3 ஆம் பநதி | கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் மீளாய்வாண்டிற்கான திரண்ட நிதியத்தின் வேறுபாடுகளைச் காண்பிக்கின்ற கூற்றொன்று அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 27,420,879 மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 9,701,425 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 17,719,454 ஆல் அதிகரித்திருந்தது. பங்களிப்பண வருமானம் ரூபா 22,839,915 இனால் அதிகரித்தமை நிதி விளைவின் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2014 ஆம் ஆண்டில் பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் 2013, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது நிதி மிகையொன்று காணப்பட்டது. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம் மற்றும் பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கியதன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 5,861,199 தொகையான பங்களிப்பு 2017 ஆம் ஆண்டு வரையில் ரூபா 20,535,476 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

1974 சனவரி 10 ஆந் திகதிய 93/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்ட கூட்டுறவு விதிகளின் 43 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுறவு நிதியத்திலிருந்து பணத்தை செலவு செய்யக்கூடிய முறைகளாக கூட்டுறவு கல்வி, விரிவாக்கல் மற்றும் பிரசார வேலைகள், கூட்டுறவு சங்கங்களின் முகாமைத்துவ செயற்றிறனை மேம்படுத்துதல் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவியளித்தல் எனக் காண்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிதியம் மூலம் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூபா 20 மில்லியன் கடன் / மானியம் வழங்குதல் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டின் பின்னர் எந்த ஒரு தொகையும் கடன் / மானியமாக வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்ட பணிகளுக்காக செலவினங்களைச் செய்யாமல் ரூபா 4,985,681 தொகை கூட்டுறவு தின விழாவிற்காகவும், ரூபா 4,518,656 தொகை திணைக்கள உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு பயிற்சிச் செலவினத்திற்காகவும் செலவிடப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

மீளாய்வாண்டில் வங்கிக் நடைமுறைக் கணக்கின் மாதாந்த சாராசரி மீதி ரூபா 9,178,067 ஆக இருந்ததுடன் மாதாந்த சராசரச் செலவினம் எதிர்வு கூறப்பட்டு மிகைப் பணத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 4.3 செயற்பாட்டு செயற்றிறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வ/ப கொபொய்கனே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 3,000,000 கடன் தொகையில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 2,983,090 தொகையான கடன் மீதி மற்றும் நிலுவையாக இருந்த ரூபா 1,173,332 தொகையான வட்டி என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்த கடன் தவணை ரூபா 55,556 வீதம் 54 தவணைகளில் கடன் அறவிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக திணைக்களத்தினால் போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 59 கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 34,303,931 தொகையான கடன் மீதி 15 வருடங்களுக்கும் 53 வருடங்களுக்கும் இடையிலான காலவீச்சிலிருந்து அறவிடப்படாமல் காணப்பட்டதுடன் அந்த செயற்பாடற்ற கடன் மீதியில் மீளாய்வாண்டின் போது ஒரு சங்கத்திலிருந்து ரூபா 35,449 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 63,418,814 தொகையான கிடைக்க வேண்டிய பங்களிப்புப் பண மீதியில் ரூபா 36,499,383 தொகை அதாவது 57.6 சதவீதமான உயர் சதவீதமொன்று வ/ப கல்விச் சேவை ஊழியர்களிடமிருந்து கூட்டுறவுச் சங்கத்திற்கு அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது. பங்களிப்புப் பண பேரேட்டின் பிரகாரம் அந்த மீதி 2006 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளில் செய்யப்பட்ட கணக்காய்வாளருக்குரியதாக ஒதுக்கப்பட்ட பங்களிப்புப் பணத்திலிருந்து கிடைக்க வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. 1972 இன் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க அதிகாரச்சட்டத்தின் 44(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுறவுச் சங்க பதிவாளரால் கூட்டுறவுச் சங்கம் கணக்காய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், இந்தச் சங்கத்திற்குரியதாக இறுதித்தடவையாக 2012 ஆம் ஆண்டின் போதே கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) 21 கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து மீளாய்வாண்டின் போது எந்தவொரு பங்களிப்புப் பணமும் கிடைக்காதிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த சங்கங்களிலிருந்து ரூபா 12,151,415 தொகையான பங்களிப்புப் பணம் கிடைக்க வேண்டியிருந்தது.

(உ) நிதியத்தின் நோக்கங்களுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது 10 வெளிநாட்டு செயலமர்வுகளுக்காக 19 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 4,518,656 தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த செயலமர்வுகளுக்கு பங்குபற்றியதால் தாம் பெற்றுக்கொண்ட அறிவு மற்றும் அனுபவங்கள் தமது கடமை நடவடிக்கைகளின் போது பயன்படுத்தும் முறைகள் தொடர்பான அறிக்கை 11 உத்தியோகத்தர்களால் மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

யுத்த பாதிப்புக்கு உட்பட்டிருந்த கூட்டுறவுச் சங்கங்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக 2015 ஆம் ஆண்டின் போது கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சிலிருந்து கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்குக் கிடைத்த ரூபா 29,000,000 தொகையில் மன்னார் மாவட்ட செயலாளருக்கு 04 செயற்திட்டங்களுக்காக ரூபா 28,000,000 தொகையும், வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு ஒரு செயற்திட்டத்திற்காக ரூபா 1,000,000 தொகையும் திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டின் போது அனுப்பப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டங்களை உரிய பிரகாரம் அமுல்படுத்துதல் தொடர்பாக திணைக்களம் பின்தொடர் நடவடிக்கைகள் செய்திருக்கவில்லை. மன்னார் மாவட்டத்தில் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட 03 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படாமையின் காரணமாக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 2,000,000 தொகையும், மீளாய்வாண்டின் போது ரூபா 16,000,000 தொகையுமாக மன்னார் மாவட்ட செயலாளரால் திணைக்களத்திற்கு மீள அனுப்பப்பட்ட ரூபா 18,000,000 தொகை அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்படாமல் நிதியத்தின் பொறுப்பாக 2018 ஆகஸ்ட் 31 அந் திகதி வரையிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றம் கட்டுப்பாடிலான குறைபாடுகள் தொடர்பாக அவ்வவ்போது கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | பயன்பாட்டுப் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படுவதில் தாமதம் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்படாமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | நிதிக்கட்டுப்பாடு | கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கடன் அறவிடுவதில் தாமதம் காணப்படல் மற்றும் பின்தொடர் நடவடிக்கை முறையாக இடம்பெறாமை |
| (இ) | பங்களிப்புப் பணம் அறவிடல் | சங்க கணக்காய்வு மற்றும் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பங்களிப்பு பணத்தை அறவிடுவதில் தாமதம் ஏற்பட்டமை. |